தினமலர்

# வேல்ஸ் நட்சத்திர விழா



வேல்ஸ் நட்சத்திர விழாவில், வலமிருந்து: நடிகர் ஆர்.ஜே.பாலாஜி. வேல்ஸ் பல்கலை வேந்தர் ஐசரி கணேஷ் மற்றும் அவரது மகன் சர்வேஷ்.

**சென்னை, மார்ச் 6–** வேல்ஸ் நட்சத்திர விழாவில், 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ – மாணவியர், தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி அசத்தினர்.

பல்லாவரம், வேல்ஸ் பல்கலையில், மாணவர்களின் தனித்திறமையை வெளிப்படுத்தும் விதமாக, 'வேல்ஸ் நட்சத்திர – 2020' விழா நடந்தது. இவ்விழாவை, பல்கலை வேந்தர், ஐசரி கணேஷ் துவக்கி வைத்தார். சிறப்பு விருந்தினராக, நடிகர், ஆர்.ஜே.பாலாஜி பங்கேற்றார்.

விழாவில், பேஷன் ஷோ, நடனம், பாடல் போட்டிகள், குறும்படங்கள் என, பல்வேறு கலை நிகழ்ச்சிகளில், பல்கலையைச் சேர்ந்த, 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ – மாணவியர் பங்கேற்று, திறமைகளை வெளிப்படுத்தி அசத்தினர்.